DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No. 240/2024

Deposition of Witness : LW6/PW5

| | | | |
|---|---|---|---|
| Name | திருமுருகன் | Taluk | |
| Father's Name | கலியபெருமாள் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **07.07.2025.** | | | |

( Accused absent. U/s.317 PFA )

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.M. ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** : நான் தற்போது சொரத்தங்குவி கிராமத்தில் வசித்து, நெய்வேலி, என்.எல்.சி யில் ஒப்பந்த பணியாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா-3 ராஜேந்திரன் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் என் கையொப்பம் இரண்டாவதாக உள்ளது. முதலாவதாக உள்ள கையொப்பம் மேற்சொன்ன ராஜேந்திரன் என்பவருடையது. கடந்த 24.07.2023 அன்று மாலை 4.00 மணியளவில் நானும், ராஜேந்திரனும் மானடிக்குப்பத்தில் உள்ள சித்தான்காத்தான் என்பவரது வீட்டின் அருகே பேசிக்கொண்டிருந்தபோது, முத்தாண்டிக்குபப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கொல்லுக்காரன்குட்டை முத்தாண்டிக்குப்பம் ரோட்டில் மானடிக்குப்பம், சித்தான்காத்தான் வீட்டின் முன்பு விசாரித்துக்கொண்டிருந்தவரை நாங்கள் இருவரும் அருகில் சென்று என்னவென்று கேட்டபோது அவர் எங்களிடம் வழக்கு சம்மந்தமாக சொல்லி, வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட போவதாகவும் அதற்கு எங்களை சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் வழக்கு விபத்து இடத்தை அடையாளம் காட்டினோம். அவர் எங்கள் இருவரின் முன்பும், வழக்கு விபத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். அந்த பார்வை மகசரில் நான் இரண்டாவதாகவும், ராஜேந்திரன் முதலாவதாகவும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் தான் தற்போது என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகசர் ஆகும். அதில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தான் நான் அப்போது செய்த சாட்சி கையொப்பம் ஆகும். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ- 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.**